**கொலன்னாவை நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொலன்னாவை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181(I) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொலன்னாவை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைப்பாடுகள் தொடர்பில் விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஓப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உற்படுத்தப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளுராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமத்திற்கு தொடர்புடையதான இனங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நியமத்தின் 3.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடப்பாண்டு நிதிக் கூற்றுகள் காலப்பகுதியில் சமர்பிக்கப்பட்டுள்ள அனைத்து பெறுமானங் களுக்காக முன்னர் சமப்படுத்த கூடிய காலப்பகுதி தொடர்பாக ஒப்பீடு செய்யக்கூடிய தகவல்கள் சமப்படுத்தி வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | உரிய நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) நியமத்தின் 3.9 பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுகளில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அதாவது ஆரம்ப பாதீடு, இறுதி பாதீடு மற்றும் இதற்கிடையே போதியளவு வேறுபாடு இருந்தால் அவற்றிற்கு காரணங்கள் வெளிப்படுத்தல் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது பாதீடு செய்யப்பட்ட தகவல்களுடன் முன்வைக்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நியமத்தின் 6.3 பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் வெவ்வேராக ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் காணி, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வேன். | |
| (ஈ) | நியமத்தின் 6.20 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான காப்பீடு தொடர்பான விபரமொன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | |
| (உ) | நியமத்தின் 15.13 ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டெழும் மற்றும் பரிமாற்றம் இடம் பெறாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறவேண்டியவற்றை அறவிடமுடியாதென பதிவழிக்கும் ஏதேனும் பெறுமதி மற்றும் அதற்கான அங்கீகாரம் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | உரிய நியமங்கள் மற்றும் வர்த்தமானி பிரகாரம் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 5,352,300,000 பெறுமதியான 27 காணிகள் நிதிக்கூற்றுகளில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நகர சபையிடமுள்ள காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2021 ஆம் ஆண்டின்போது கணக்கீடு செய்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் பற்றாக்குறை / மிகை உள்ளடக்கப்படாத மூலதன மானிய கணக்கு மீதியாக ரூபா 13,459,770 என பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்குரிய பொதுப் பேரேட்டுக் கணக்கில் கணக்கொன்று இல்லாமல் இருந்தது. ஆனாலும் நிதிக் கூற்றுகளில் மூலதன மானியமாக ரூபா 15,133,841 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மானியத்திலிருந்து ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,674,071 ஆன மூலதனச் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் பற்றாக்குறை / மிகை உள்ளடக்கப்படாத மூலதன மானிய கணக்கு மீதியாக ரூபா 13,459,770 என பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்குரிய பொதுப் பேரேட்டுக் கணக்கொன்று இல்லாமல் இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டின் போது அதற்காக கணக்கொன்று பேணிச் செல்ல நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யநடவடிக் கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | புதியசபை கூட்ட மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக 2020 திசெம்பர் 10 ஆம் திகதி அரசிடமிருந்து கிடைத்த ரூபா 2,000,000 தொகை 2020 நவம்பர் 03 ஆந் திகதி நிர்மாணத்திற்காக அரசிடமிருந்து கிடைத்த ரூபா 2,800,000 தொகை 2020 திசெம்பர் 08 ஆந் திகதி கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த மூலதன மானியம் ரூபா 335,203 தொகை திரண்ட நிதியத்தின் மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு செலவு வைத்தமையால் மீளாய்வாண்டின் மூலதன மானியம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு தவறாக செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யநடவடிக் கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 7,286,645 ஆன பெறுமதியுடைய 12 சபை நிர்மாணங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுகளில் நடைமுறை வேலைகளின் கீழ் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது நிதிக்கூற்றகளில் நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | |
| (உ) | 70 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் அரசின் மூலதன நன்கொடை ரூபா 15,053,337 தொகையை கணக்கீடு செய்யும்போது நடைமுறை வேலைக்கு பதிலாக கட்டிடங்கள் ரூபா 2,777,503 மற்றும் வீதிகள், மதகுகள் என்பவற்றிற்காக ரூபா 12,275,834 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஏதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுகளில் நடை முறைவேலைகளின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யநடவடிக் கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வகை கணக்குகளுக்குரிய நிதிக்கூற்றுகளுக்கு அமைவான பெறுமதி மற்றும் அட்டவணைகளின் படியான பெறுமதிகளுக்கிடையே ரூபா 3,826,585 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஏதிர்வரும் ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுப்பேன். | பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்வு தொடர்பான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 59,747,113 ஆன 07 வகை கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்வரும் ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுப்பேன். | உரிய அனுமதி மற்றும் விபரமான அட்டவணைகள் சமர்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,217,504 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 82,914,518 ஆக இருந்தது.

### 2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

**வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி ரூபா 48,408,473 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 40,000 இற்க மேற்பட்ட பெறுமதி உடைய 90 நிலுவை வீதவரி மீதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 22,050,406 ஆக இருந்தது. மேலும் ரூபா 3,728,661 ஆன வீதவரி கடன்பட்டோர் மீதியை இனங்காண்பதற்கு விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்தி எஞ்சியுள்ள நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கும் எதிர்காலத்தில் அட்டவணைகளை சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | ஆதனங்களை தடைசெய்வதற்கோ அல்லது நீதிமன்ற செயற்பாடுகள் போன்ற நடைமுறை மூலம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதுடன் அட்டவணைகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு நிதி ஏற்பாடுகளின் மூலம் கொலன்னாவை நகர சபை அதிகார பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் 2150 பிள்ளைகளுக்காக தேவையான புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிய 2839 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மூலம் ரூபா 940,438 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 252,223 பெறுமதியான 598 புத்தக பொதிகள் 2021 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. இங்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் யார் என்பது இணங்கானப்படாது கொள்வனவு செய்யப்பட்டதனால் இந்த பகிர்ந்தளிப்பதற்கு காலதாமதமாகியதாக அவதானிக்கப்பட்டது. | இரண்ட தடவை புத்தக பகிர்ந்தளித்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நடவடிக்கை எடுத்த போதும் வெவ்வேறு சிக்கல்கள் காரணமாக இச்செயற்பாட்டினை திட்டமிட்ட திகதியில் மேற்கொள்ள முடியாமல் போனது. தொடர்பாடல் சிக்கல்கள் காரணமாக புத்தக பகிர்ந்தளிக்கும் தினத்தில் போதியளவு விண்ணப்பதாரிகள் வருகை தராமை காரணமாக புத்தக பார்சல் எஞ்சுவத்கு காரணமாக இருந்தது. | பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் போது தேவையுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்கண்டு அதன் பிரகாரம் கொள்வனவு செய்து விரைவில் குறித்த பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்ள வேண்டும். |